



# என் கனவு

## நமது கோவை

# 100/500

100 வாக்குறுதிகள் 500 நாட்களில் நிறைவேற்றப்படும்

100 Copies

Publisher : Vijayakumar V, Coimbatore | Printer : M/s Easan Print, Coimbatore



# மோடியின் Guarantee

– இருக்க பயம் எதற்கு

- கோவை பாராளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளில் பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகம் திறக்கப்பட்டு மக்கள் குறைதீர்ப்பு மையமாக செயல்படும்.
- கோவை விமான நிலையத்தை, உலகத் தரத்திற்கு விரிவாக்கம் செய்து சர்வதேச விமான முனையமாக மேம்படுத்தப்படும். கோவை மெட்ரோ திட்டப்பணிகள் விரைந்து முடிக்கப்படும்.
- தமிழகத்தில் இரண்டாவது Indian Institute of Management (IIM) கோவையில் நிறுவப்படும்.
- விவசாய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஆனைமலை-நல்லாறு திட்டம் செயல்படுத்தப்படும். கோவையின் ஜீவநதியாக இருக்கும் நொய்யல் நதி மற்றும் அதன் கிளை நதியான கௌசிகா நதிகளை மீட்டெடுத்து கோவையின் நீர்வளம் மேம்படுத்தப்படும்.
- விசைத்தறி உரிமையாளர்கள் பயன்பெறும் வண்ணம் பவர் டெக்ஸ் திட்டம் மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும். பவர் டெக்ஸ் திட்டத்தின் கீழ் சூரிய மின் தகடுகள் அமைக்க மற்றும் சாதாரண விசைத்தறிகளை நாடா இல்லாத விசைத்தறிகளாக மாற்ற வழங்கப்படும் மானிய தொகை உயர்த்தி வழங்கப்படும்.
- கோவையில் NIA மற்றும் NCB கிளை அலுவலகங்கள் அமைக்கப்படும்.

- கோவையில் Automotive Corridor அமைக்கப்படும். கோவை Defence Corridor-ல் செமிகண்டக்டர்களை தயாரிக்க பாதுகாப்பு அமைச்சகத்திடம் வலியுறுத்தப்படும்.
- கோவை பாராளுமன்றத்தில் மத்திய அரசின் 4 நவோதயா பள்ளிகளை அமைத்து, நமது குழந்தைகளுக்கு உலகத்தரம் வாய்ந்த கல்வி கிடைக்க வழிவகை செய்யப்படும்.
- இந்த பகுதியின் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு சிறப்பான பயிற்சிகள் கிடைப்பதை உறுதி செய்ய ஆசியாவின் மிகப்பெரிய விளையாட்டு பயிற்சி மையங்களில் ஒன்றான தேசிய விளையாட்டு ஆணையம், பாட்டியாலாவின் (SAI Patiala) கிளை பயிற்சி மையம் கோவையில் அமைக்கப்படும்.
- கோவை பாராளுமன்றத்தில் 250 மக்கள் மருந்தகங்கள் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.
- வயோதிகர்களுக்கு உடல் ரீதியான மற்றும் உளவியல் ரீதியான சிறப்பு மருத்துவ தேவையை பூர்த்தி செய்ய கோவையில் உலக தரம் வாய்ந்த தேசிய முதியோர் நல மருத்துவ மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- நாடு முழுவதும் உள்ள புராதனமான ஆன்மீக தலங்களுக்கு கோவையில் இருந்து 10 புதிய ரயில்கள் இயக்கப்படும். சபரிமலை யாத்திரையை ஒருங்கிணைக்க உதவி மையம் அமைக்கப்படும்.
- கொங்கு மண்டலத்தில் மத்திய அரசின் உதவியோடு உயர்தர புற்றுநோய் சிகிச்சை மருத்துவமனை நிறுவப்படும். ஆயுஷ்மான் பாரத் திட்ட பயனாளிகளுக்கு இம்மருத்துவமனையில் இலவச சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- கர்மவீரர் காமராஜர் அவர்களின் நினைவாக, அரசு மற்றும் தனியார் பங்களிப்போடு கோவை மாநகரில் 3 Food Bank (உணவகம்) நிறுவப்படும்.
- கடந்த 10 ஆண்டுகளில், கோவை பாராளுமன்ற தொகுதிக்கு மத்திய அரசு வழங்கிய அனைத்து நலத்திட்டங்கள் மற்றும் கோவைக்கு ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதி ஆகியவை சிறப்பு தணிக்கைக்கு உட்படுத்தப்படும். இந்த தணிக்கையில் கண்டறியப்படும் முறைகேடுகளின் மீதும், அதற்கு காரணமானவர்களின் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்படும்.

# உலக வரைபடத்தில்
# கோவையை முதன்மையாக்குவோம்

- கோயம்புத்தூர், தமிழகத்தில் மட்டுமல்ல, இந்திய அளவில், உலக அளவில் மிக முக்கியமான நகரங்களில் ஒன்று. பெண்களுக்குப் பாதுகாப்பான நகரங்களில்,நமது கோயம்புத்தூரும் ஒன்று. தமிழகத்தின் இரண்டாவது பெரிய நகரமாக விளங்கும் கோயம்புத்தூர், சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் தொட்டிலாக விளங்குவதோடு அல்லாமல் நொய்யல், சிறுவாணி போன்ற ஆறுகளால் விவசாயம் தழைத்தோங்கும் பகுதியாகவும் விளங்குகிறது ஆட்டோமொபைல் தொழில், ஜவுளி தொழில், மோட்டார் பம்ப் செட்டுகள், ஃபவுண்டரி, தங்க நகைகள், வெட் கிரைண்டர்கள் என பல்வேறு தொழில் உபகரணங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் செய்யும் தொழிற்சாலைகளால் நிறைந்துள்ளது நமது கோயம்புத்தூர்.

- சுமார் 200 ஆண்டுகளுக்கும் முன்பாக உருவாக்கப்பட்ட கோவை மாவட்டம்தான், தமிழகத்தில் கல்வி நிறுவனங்கள் நிறைந்த மாவட்டம். ஆண்டு தோறும் பல ஆயிரம் தகுதியான மாணவர்கள் கோயம்புத்தூரில் கல்வி பயின்று, உலக அளவிலான நிறுவனங்களில் பணிபுரிகின்றனர். அதுமட்டுமல்லாது, விவசாயத்துக்கும், சுற்றுலாத் துறைக்கும் பெயர்போன பூமி நமது கோயம்புத்தூர்.

- தமிழகத்தில் எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், கோயம்புத்தூரின் சிறப்புக்கு எந்தக் குறைவும் ஏற்பட்டிருக்காது. ஏனெனில், கோயம்புத்தூர் அரசின் உதவியால் வளர்ந்த நகரம் அல்ல. மக்களின் கடின உழைப்பாலும், தொலைநோக்குச் சிந்தனையாலும் வளர்ந்த நகரம். ஒரு அரசின் பணி என்பது, இத்தனைச் சிறப்பு மிக்க நகரம் மென்மேலும் வளர உதவுவதும், இன்னும் பல லட்சம் மக்கள் பயன்படும்படி, திட்டங்கள் கொண்டு வருவதும், ஏற்கனவே இருக்கும் தொழில்களை மேம்படுத்த உதவுவதுமாகத்தான் இருக்க வேண்டும்.

- ஆனால், கோயம்புத்தூரின் வளர்ச்சிக்கு, இத்தனை ஆண்டு காலமாக தமிழகத்தை ஆண்ட, ஆளுகின்ற கட்சிகள் உதவி செய்துள்ளார்களா என்றால், இல்லை என்றுதான் கூற வேண்டும். கோயம்புத்தூரின் வளர்ச்சியை, தங்கள் தனிப்பட்ட வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர் என்பதுதான் உண்மை. குறிப்பாக, கடந்த மூன்று ஆண்டுகளில், கோயம்புத்தூர் சந்தித்த பிரச்சினைகள் எத்தனை, புறக்கணிப்புகள் எத்தனை? மின்சாரக் கட்டண உயர்வு தொடங்கி, சிறு குறு நிறுவனங்கள் சந்தித்த பாதிப்புகள், நில ஆக்கிரமிப்பு, பல ஆண்டுகளாகக் கிடப்பில் போடப்பட்டிருக்கும் அத்திக்கடவு அவிநாசி திட்டம், விவசாயிகள் சந்திக்கும் பிரச்சினைகள், சமீபத்தில் சுமார் நூறு கோடி ரூபாய் அளவில் மாநில அரசு திரும்ப வழங்க வேண்டிய ஜிஎஸ்டி வரி என கோயம்புத்தூரின் வளர்ச்சிக்கு போடப்பட்ட முட்டுக்கட்டைகள் எத்தனை? இதற்கு மேல், கோயம்புத்தூர் குறித்துப் பாராளுமன்றத்தில் ஒரு வார்த்தை கூடப் பேசாமலேயே ஐந்து ஆண்டுகளைக் கழித்த பாராளுமன்ற உறுப்பினர். தாங்கள் எதுவும் செய்யாமலேயே கோயம்புத்தூர் நகரம் நிச்சயம் வளரும் என்பது இவர்கள் அனைவருக்குமே தெரியும்.



- ஆனால், மக்களின் மீது அன்பு கொண்ட மக்கள் பிரதிநிதிகள், அந்த வளர்ச்சியைப் பல மடங்கு அதிகப்படுத்த விரும்புவார்கள். அதன் மூலம், நம் அடுத்த தலைமுறைக்கு, எந்தக் குறையும் இல்லாத வாழ்க்கையை, நகரத்தை, மாநிலத்தை, நாட்டை உருவாக்க முயற்சிகளை மேற்கொள்வார்கள். நமது மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களை போல.

- கோயம்புத்தூரின் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக, ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் 1455 கோடி ரூபாய், கோவை சர்வதேச விமானநிலைய விரிவாக்கத்திற்கு 2000 கோடி ரூபாய், 580 கோடி ரூபாய் செலவில் இஎஸ்ஐ மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மேட்டுப்பாளையம் ரயில்நிலையத்தை புனரமைக்க 75 கோடி ரூபாய், 53,688 பேருக்கு பிரதமரின் அனைவருக்குமான வீடு திட்டத்தின் கீழ் வீடு, 3,30,588 வீடுகளில் குழாயில் குடிநீர், 1,14,763 வீடுகளில் இலவச கழிப்பறைகள், 43,451 பேருக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்பு, 1,19,709 பேருக்கு 5 லட்ச ரூபாய் பிரதமரின் மருத்துவ காப்பீடு, 62,893 விவசாயிகளுக்கு வருடம் ரூ.6,000 என இதுவரை ரூ.30,000, புதிய தொழில்முனைவோர்களை உருவாக்க, ரூ.9,602 கோடி முத்ரா கடன் உதவி, உள்ளிட்ட இவை அனைத்தும் கோயம்புத்தூர் மாவட்டத்துக்கு மட்டுமே வழங்கப்பட்டவை. இவற்றில் விளம்பரம் இல்லை, பொதுமக்களுக்கு வீண் அலைச்சல் இல்லை. இலவசம் என்ற பெயரில் ஏமாற்றவில்லை. ஒரு ரூபாய் கூட லஞ்சம் ஊழல் இல்லை. பொதுமக்களுக்கே நேரடியாக மத்திய அரசின் நலத்திட்டங்கள் அனைத்தும் கிடைக்கின்றன.

- கோயம்புத்தூரின் பிரச்சினைகள் குறித்தும், தேவைகள் குறித்தும் பாராளுமன்றத்தில் கடந்த பத்து ஆண்டுகளாக எதுவுமே கேள்வி எழுப்பாத, வளர்ச்சித் திட்டங்களைக் கேட்டுப் பெறாத, பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தபோதே, மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் தலைமையிலான மத்திய அரசு, நமது கோயம்புத்தூரின் நலனுக்காக இத்தனை திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது என்றால், நம் கோயம்புத்தூருக்காக, நம் மக்களுக்காகப் பேசும் ஒருவர், கடந்த பத்து ஆண்டுகளில் எத்தனை திட்டங்களைக் கொண்டு வந்திருக்கலாம்?



- நமது தேவை, கோயம்புத்தூரின் வளர்ச்சிக்காகப் பாராளுமன்றத்தில் பேசுகின்ற, லஞ்சம், ஊழல் இல்லாத, மத்திய அரசின் திட்டங்கள் அனைத்தையும் தொகுதி மக்கள் நலனுக்காகச் செயல்படுத்தக்கூடிய ஒரு பாராளுமன்ற உறுப்பினர். நமது கோயம்புத்தூரை, உலக அளவில் மிக முக்கியமான நகரமாக மாற்ற விரும்புகின்ற, மாற்றும் திறன் படைத்த நமது பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் கனவைச் செயல்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்.



# கோவைக்கான உட்கட்டமைப்பு திட்டங்கள்

## உலகத் தரத்தில் விமான நிலையம்

இதுவரை கோவையின் பிரதிநிதிகளாக இருந்தவர்கள் கண்டுகொள்ள தவறிய கோவை விமான நிலையத்தை, உலகத் தரத்திற்கு விரிவாக்கம் செய்து நவீனமயமான விமான முனையமாக மாற்றுவோம். இலங்கை, தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், துபாய் உள்ளிட்ட பிற நாடுகளுக்கு விமான சேவையை விரிவுபடுத்துவோம். விமான சரக்கு முனையத்தை மேலும் விரிவாக்கம் செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.







## மெட்ரோ ரயில் சேவை

கோவை மெட்ரோ திட்டப்பணிகள் விரைந்து முடிக்கப்படும் என உறுதியளிக்கிறோம்.

## புறநகர் ரயில் சேவை

தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வரும் கோவையில், மக்களின் போக்குவரத்து தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்யவும், வருங்கால வளர்ச்சியை கருத்தில் கொண்டும், கோவை நகரை சுற்றி புறநகர் ரயில் திட்டம் தேவைப்படுவதாக பல தரப்பில் இருந்து கோரிக்கை எழுந்துள்ளது. இதனை பரிசீலித்து, கோயம்புத்தூர் சந்திப்பு, கோயம்புத்தூர் வடக்கு ரயில் நிலையம், பீளமேடு ரயில் நிலையம், இருகூர் ரயில் நிலையம், சிங்காநல்லூர் ரயில் நிலையம் மற்றும் போத்தனூர் ரயில் நிலையம் ஆகியவற்றை இணைக்கும் வகையில் புறநகர் ரயில் சேவை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.





- செட்டிப்பாளையம் முதல் கரூர் வரை பல்லடம், காங்கேயம், வெள்ளகோவில் வழியாக புதிய ரயில் வழித்தடம் அமைக்க வேண்டும் என்ற மக்களின் கோரிக்கை  பரிசீலிக்கப்படும்.

- கோவை மக்களின் வசதிக்காக கோவைக்கென்று தனி ரயில்வே கோட்டம் அறிவிக்கப்பட்டு  மூன்று புதிய ரயில் முனையங்களும் உருவாக்கப்படும், மேலும் வடகோவை மற்றும் போத்தனூர் ரயில் நிலையங்கள் உலகத்தரம் வாய்ந்த ரயில் முனையங்களாக தரம் உயர்த்தப்படும். கோயம்புத்தூர் ரயில் சந்திப்பில் நிலவும் போக்குவரத்து நெரிசலை குறைக்க பீளமேடு மற்றும் சிங்காநல்லூர் ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்படும்.





- கோவை எக்ஸ்பிரஸ் போன்று கோவை- பொள்ளாச்சி, பழனி, மதுரை, திருநெல்வேலி தினசரி ரயில் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

- எதிர்காலப் போக்குவரத்து நெருக்கடியை சமாளிக்க மத்திய அரசின் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் சிங்காநல்லூர், சரவணம்பட்டி, கணபதி, துடியலூர், லாலி ரோடு சந்திப்பு, வடவள்ளி, சாய்பாபா காலனி உள்ளிட்ட இடங்களில் புதிய மேம்பாலங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.





- திருச்சி பொன்மலையில் உள்ளது போன்று கோவை போத்தனூர் அல்லது வடகோவையில் ரயில்வே பணிமனை அமைத்து புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

- கோவை மக்கள் தென் தமிழகம் விரைந்து செல்ல அவர்களின் பயன்பாட்டிற்காக கோவை – கன்னியாகுமரி, கோவையிலிருந்து கொச்சி வழியே திருவனந்தபுரம் வரை புதிய வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்படும்.





## கோவைக்கான சாலை திட்டங்கள்

கோவை- திருச்சி சாலை புதிய 6 வழிச்சாலையாக விரிவாக்கப்படும். கோவை- கரூர் இடையே 8 வழிச்சாலை திட்டத்தை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

- பல்லடம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகள் மேலும் வளர்ச்சியடைய தற்போது இரண்டு வழி சாலையாக உள்ள பல்லடம்- கரூர் தேசிய நெடுஞ்சாலை 81, ஆறு வழிச்சாலையாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.





- கோவை நகர் வழியாக தற்போது சென்னை-கோவை -கொச்சி (NH 544), கோவை- மைசூரு (NH 948), கோவை- ஊட்டி (NH 181), கோவை - நாகப்பட்டினம் (NH 83), கோவை - திருச்சி(NH 81) ஆகிய தேசிய நெடுஞ்சாலைகள் செல்கின்றன.

  வெளியூர்களில் இருந்து மற்ற நகரங்களுக்கு செல்லும் வாகன ஓட்டிகள் கோவை நகரின் உள்ளே வந்து  செல்ல நேரிடுவதால்  கோவை நகருக்குள் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து வருகிறது.

  இதற்கு தீர்வு காணும் விதமாக கோவை நகரின் வடக்கு மற்றும் கிழக்கு எல்லைகளை இணைக்கும் வகையில் NH 181, NH 948, NH 544 மற்றும் NH 81 ஆகிய தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கும் வெளிவட்ட சாலை திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

- L&T பைபாஸ் சாலையின் ஒரு பகுதியான நீலாம்பூர் முதல் மதுக்கரை வரையிலான பகுதி இரு வழி சாலையாக இருப்பதால் வாகன ஓட்டிகளுக்கு பெரும் பிரச்னையாக இருந்து வருகிறது.

  கடந்த 2023-ல் கோவை நகரில் சாலை விபத்துக்களால் நேர்ந்த 680 மரணங்களில் 120 மரணங்கள் இந்த பகுதியில் நடந்துள்ளது.



கல்வி நிறுவனங்கள் அதிகம் உள்ள பகுதி என்பதால் மரணமடைந்தவர்களில் கிட்டத்தட்ட பாதி பேர் 24 வயதுக்கு குறைவானவர்கள். குறுகலாக உள்ள இந்த 2 வழி சாலையை 8 வழி சாலையாக மாற்ற மத்திய அரசின் உதவியுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.



## நடைப்பயிற்சிக்கு தனி பாதை

நடைப்பயிற்சி, ஓட்டப் பயிற்சி,சைக்கிள் பயணம் ஆகியவற்றிற்கு பிரத்யேகமான நவீன பாதை வசதிகள் உருவாக்கப்படுவதோடு. உயர் தரத்தில் யோகா, தியான பயிற்சி மையங்கள் ஏற்படுத்தப்படும்.

## பராமரிப்பு உறுதி செய்யப்பட்ட குடிநீர், கழிப்பறை வசதி

மக்கள் அடர்வு அதிகம் உள்ள அனைத்து பேருந்து நிலையங்களிலும் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் சுத்திகரிக்கப்பட்ட இலவச குடிநீர் வசதி மற்றும் இலவச கழிப்பிட வசதி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இவற்றை பொது மக்கள் தயக்கம் இல்லாமல் எந்நேரமும் பயன்படுத்த ஏதுவாக முறையாக பராமரிக்க திட்டம் வகுக்கப்படும்.






## கோவைக்கு புதிய பேருந்து முனையம்

திருச்சி சாலை – அவிநாசி சாலைக்கு இடையே மத்திய அரசின் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் புதிய பேருந்து முனையம் அமைக்கப்படும்.

## கோவைக்கு புதிய மேம்பாலங்கள்

எதிர்காலப் போக்குவரத்து நெருக்கடியை சமாளிக்க மத்திய அரசின் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் சிங்காநல்லூர், சரவணம்பட்டி, கணபதி, துடியலூர், லாலி ரோடு சந்திப்பு, வடவள்ளி, சாய்பாபா காலனி உள்ளிட்ட இடங்களில் புதிய மேம்பாலங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.





## பெங்களூரு நெடுஞ்சாலை பணிகள் விரைவு

கோவையில் இருந்து சத்தியமங்கலம் வழியாக பெங்களூரு செல்லும் தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கப் பணிளை விரைவுப் படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

# கோவைக்கான விவசாயம் சார்ந்த திட்டங்கள்



## அத்திக்கடவு–அவிநாசி திட்டம் 2.0

ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக கோவை மக்களின் முக்கிய கோரிக்கையாக இருந்து வருவது அத்திக்கடவு - அவிநாசி திட்டம். 1957-ல் அப்போதைய சட்டமன்ற உறுப்பினர் திரு மாரப்ப கவுண்டர் அவர்களால் காமராஜரிடம் இருந்து ஒப்புதல் பெறப்பட்ட இந்த திட்டம் தற்போது வரை முழுமை அடையாமல் இருப்பதற்கு தமிழகத்தை ஆண்ட கட்சியும் ஆளுகின்ற கட்சியும் மட்டுமே காரணம்.

கடந்த 2021 முதல் தற்போது வரை இந்த திட்டத்தின் திறப்பு விழா 25 முறைக்கும் மேல் தள்ளிவைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் விரைவில் பயன்பாட்டிற்கு வரும் என தொடர்ந்து மக்களை ஏமாற்றிவரும் திமுக அரசின் போலி முகத்தை கிழித்தெறிந்து இரண்டாம் அத்திக்கடவு- அவிநாசி திட்டத்தின் மூலம் விடுபட்ட குளங்கள் இணைக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு விரைந்து கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.



## ஆனைமலையாறு – நல்லாறு திட்டம் செயல்படுத்தப்படும்

கோவை உள்ளிட்ட கொங்கு மண்டலத்தின் நீர் ஆதாரத்தை உறுதி செய்ய அரை நூற்றாண்டுக்கு முன்பு போடப்பட்ட ஆனைமலையாறு- நல்லாறு சிற்றணை திட்டத்தை, மக்கள் மற்றும் விவசாயிகள் நலன் மீது அக்கறையில்லாமல் திராவிட கட்சிகள் கிடப்பில் போட்டுள்ளது. 1958-ல் ஒப்பந்தம் மேற்கொண்டு 66 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. 1970-ல் அணையை கட்டத் தொடங்கிய கேரள அரசு, 1985-ல் பணிகளை முடித்து, அதை பயன்பாட்டுக்கும் கொண்டுவந்துவிட்டது.

தமிழக அரசு அணையை கட்ட உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்காததால், தமிழக விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய 8.5 டிஎம்சி தண்ணீர் கடலில் கலந்து வீணாகிறது. கிடப்பில் போடப்பட்டுள்ள இந்த திட்டத்தை மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## பாண்டியாறு – புன்னம்புழா நீர்ப் பாசன திட்டம்

கடந்த 40 ஆண்டு காலமாக முன்னாள் மற்றும் இந்நாள் தமிழக அரசால் கிடப்பில் போடப்பட்ட திட்டம் பாண்டியாறு- புன்னம்புழா நீர்ப் பாசன திட்டம். பல்லடம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதி விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையான இத்திட்டத்தினை செயல்படுத்தி நமக்கு தேவையான 7 டிஎம்சி தண்ணீரை பெற்று தர நடவடிக்கை எடுக்கப்படும்.








## தென்னை நார் தொழில்

தென்னை நாரிலிருந்து உருவாக்கப்படும் மதிப்புக் கூட்டுப் பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிப்போம். இந்த பொருட்களுக்கான ஏற்றுமதி தர விதிமுறைகள் எளிமைப்படுத்தப்பட்டு தென்னை நார் மதிப்புக் கூட்டு பொருட்களின் ஏற்றுமதி அதிகரிக்கப்படும்.



## பாரம்பரிய விவசாயம்

ஒரு காலத்தில் கோவையில் அதிகம் பயிரிடப்பட்ட அதிகமாக நீர் பயன்படுத்தாத கொள்ளு மற்றும் நாட்டு ரக சோளம் ஆகியவற்றை மீண்டும் பயிரிட ஊக்குவிக்கப்படும்.




## விவசாய ஏற்றுமதி மையம்

விவசாய விளைப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஊக்குவிக்கும் பொருட்டு குளிர்சாதன வசதியுடன் கூடிய விவசாய ஏற்றுமதி மையம் ஏற்படுத்தப்படும்.

## இயற்கை உரம்

இயற்கை உரத்தை அதிகளவில் உற்பத்தி செய்ய மத்திய அரசின் மானியம் வழங்கப்படும்.





- பல்லடத்தின் உயிர்நாடியாக இருப்பது கறிக்கோழி பண்ணை. அப்பண்ணையிலிருந்து வரும் கழிவுகள் மூலம் இயற்கை உரம் தயாரிக்க சிறு தொழில் முனைவோருக்கு தேவையான உதவிகள் செய்ய திட்டம் வகுக்கப்படும். மத்திய அரசின் நிதியில் கோழி ஆராய்ச்சி நிலையம் கட்டப்பட்டு கொண்டிருக்கிறது. அது விரைவில் கட்டி முடிக்கப்படும்.

## வறட்சிப் பகுதிக்கு நீர் ஆதாரம்

பொங்கலூர் மற்றும் சூலூருக்கு இடையே உள்ள பகுதி மிகவும் வறட்சி நிறைந்த பகுதியாக உள்ளது. இந்த பகுதிக்கு, கோவை மாவட்டம் பள்ளபாளையம் குளத்தில் இருந்து தண்ணீர் கொண்டு வந்து, விவசாயிகளை காக்க நடவடிக்கை எடுக்கப்படும்.





## பட்டு உற்பத்தி

மத்திய பட்டு வாரியம் மூலம் மத்திய அரசு 2021-22 முதல் 2025-26 வரை தமிழ்நாடு உட்பட நாட்டின் ஒட்டுமொத்த பட்டு வளர்ப்புத் தொழிலின் வளர்ச்சிக்காக ‘சில்க் சமக்ரா-2’ என்ற திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டம் கோவையின் அனைத்து பட்டுப்புழு வளர்ப்பு விவசாயிகளை சென்றடைய நடவடிக்கை எடுக்கப்படும்.

## கோவையில் கால்நடை மருத்துவமனை

கோவையில் கால்நடை மருத்துவ ஆலோசனைகள், தடுப்பூசிகள் மற்றும் விரிவான அறுவை சிகிச்சைகள் உட்பட அனைத்தும் அடங்கிய ஒரு சிறந்த கால்நடை மருத்துவமனை அமைக்க மாநில அரசிடம் வலியுறுத்தப்படும்.



# கோவைக்கான கல்விச் சார்ந்த திட்டங்கள்

# IIM

## கோவைக்கு IIM

தமிழகத்தில் இரண்டாவது Indian Institute of Management (IIM) கோவையில் நிறுவப்படும்.

## நவோதயா பள்ளிகள்

கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய மாணவர்களுக்கு தரமான கல்வியை நவோதயா பள்ளிகள் மூலம் இலவசமாக மத்திய அரசு வழங்குகிறது. இத்தனை ஆண்டுகளாக தமிழக ஆட்சியாளர்கள் தமிழகத்தில் நவோதயா பள்ளிகளை அனுமதிக்காமல் ஏழை எளிய கிராமப்புற மாணவர்களை வஞ்சித்து வருகின்றனர்.



நகரங்களில் உள்ள பள்ளிகளைப் போலவே கிராமப்புறங்களிலும் தரமான கல்வியை இலவசமாக வழங்கும் வகையில் ஒரு நாடாளுமன்ற தொகுதிக்கு நான்கு நவோதயா பள்ளிகள் நிறுவப்பட்டு, உலகத்தரம் வாய்ந்த கல்வி நமது குழந்தைகளுக்கு கிடைக்க வழிவகை செய்து கொடுப்போம். கோவையில் மேலும் ஒரு கேந்திரிய வித்யாலயா பள்ளி அமைக்கப்படும்.

## கல்விக்கடன்



மாணவர்களுக்கு கல்விக்கடனான மத்திய அரசின் “வித்யா லட்சுமி” கடன் திட்டத்தின் சிறப்பை மாணவர்களிடையே அதிகமாக கொண்டு சேர்ப்பதுடன் ஆட்சிக்கு வந்தால் கல்வி கடன் ரத்து செய்யப்படும் என்ற திமுகவின் தேர்தல் வாக்குறுதியை அவர்கள் நிறைவேற்ற அழுத்தம் கொடுக்கப்படும்.

## திறன் மேம்பாடு



மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களின் கீழ் வழங்கப்பட்டு வரும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் ஒரே குடையின் கீழ் கொண்டுவரப்பட்டு ஆண்டுக்கு கோவை பாராளுமன்றத்துக்கு உட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளில் தலா 10,000 பேருக்கு பயிற்சி அளித்து வேலைவாய்ப்பு கிடைக்க உதவி செய்யப்படும்.

## சிறு குறு தொழில் மேம்பாட்டு மையம்



கோவை ராம் நகர் படேல் சாலையில் அமைந்துள்ள மத்திய அரசின் சிறு குறு தொழில் மேம்பாட்டு மையத்தில் அதிக அளவிலான திறன் பயிற்சிகள் அளிக்கும் வகையில் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## மத்திய அரசின் உயர்க் கல்வி நிறுவனம்




மத்திய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் The Indian Institute of Foreign Trade கல்வி நிறுவனம் சர்வதேச வணிகம் மற்றும் வர்த்தகம் சார்ந்த படிப்புகளை வழங்கி வருகிறது. கோவையின் அடுத்த தலைமுறையினர் சர்வதேச வணிகத்தில் நிபுணத்துவம் பெறும் வகையில் கோவையில் IIFT நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும்.

## செவிலியர் மற்றும் துணை மருத்துவப் பயிற்சி



செவிலியர் மற்றும் துணை மருத்துவ ஊழியர்களுக்கான (paramedical) மத்திய அரசின் பயிற்சி நிறுவனம் அமைக்கப்படும்.


# தொழில் மற்றும் வர்த்தகம்

## தொழில் முனைவோர்களுக்கு




சிறுதொழில் முனைவோர் மற்றும் சிறு வணிகங்களுக்கு பயிற்சி, வழிகாட்டுதல்கள் போன்ற உதவிகளை வழங்கும் வகையில் தொழில் முனைவோர் வசதி மையங்கள் அமைக்கப்படும்.

சிறுதொழில்களுக்கு பலனளிக்கும் வகையில் கோவை அரசூரில் MSME தொழில்நுட்ப மையம் விரைவில் அமைக்கப்படும்.



## தங்க நகை பட்டறை பூங்கா

20 ஆண்டுகளுக்கு முன்பு தங்க நகை தயாரிப்பில் இந்தியாவின் முதன்மை நகரமாக இருந்த கோவை தற்போது பொலிவிழந்து நிற்கிறது. இதனை மீட்டெடுக்கும் விதமாக மத்திய அரசின் உதவியுடன் கோவையில் தங்க நகை தயாரிப்பு பயிற்சி மையம் உள்ளடக்கிய ஆபரண தங்க நகை பட்டறை பூங்கா (Jewellery Park) அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## மோட்டார் வாகன ஆராய்ச்சி மையம்



கோவையில் இயங்கும் ஆட்டோமொபைல் உதிரிபாகங்கள் தயாரிப்பு நிறுவனங்களுக்கு உதவுவதற்கும், மேம்படுத்துவதற்கும் மத்திய அரசின் மோட்டார் வாகன ஆராய்ச்சி மையம் அமைக்கப்படும்.

## ஏற்றுமதி ஊக்குவிப்பு



கோவையில் தயாரிக்கப்படும் ஆயுத்த ஆடைகள், பம்ப் செட்கள், ஆட்டோமொபைல் உதிரிபாகங்கள், வெட் கிரைண்டர்கள், வார்ப்படங்கள் உள்ளிட்டவற்றை சர்வேதச அளவில் சந்தைப்படுத்தும் வண்ணம் ஏற்றுமதி செய்வதை ஊக்கப்படுத்துவோம்.

## ஃபவுண்டரி தொழில் மீட்பு



கோவையின் உயிர்நாடியாக இருந்த பம்பு செட் தொழிற்சாலைகளை மீட்டெடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். நலிவடைந்து வரும் **casting** மற்றும் **foundry** தொழில்களை மீண்டும் உயிர்பெறசெய்ய மத்திய அரசின் மானியத்தில் **stainless steel casting** தொழிற்சாலைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## சிறு லேத் இயந்திரங்களை கையாள மகளிருக்கு பயிற்சி




கோவைக்கு ஏற்கனவே மத்திய அரசு **Defense Corridor** அறிவித்துள்ள நிலையில், **MSME** நிறுவனங்கள் மேலும் பயனடைய அதிகளவிலான உதிரி பாகங்களை கோவையில் தயாரிக்கவும், **mini CNC lathe**-க்களை பயன்படுத்தும் பயிற்சிகளை மகளிருக்கு வழங்கி மகளிர் முன்னேற்றத்தை முன்னெடுப்பது மட்டுமில்லாமல் இதன் மூலம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

## ராணுவச் சீருடைகள் தயாரிப்பு நிறுவனம்

இந்திய ராணுவத்திற்கு சீருடைகள், பொது அங்காடிகள், தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட தயாரிப்புகள் மற்றும் பல்வேறு வகையான ஆடைகள் மற்றும் அணிகலன்களை தயாரிக்கும் மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான **Troops Comforts Limited**-ன் பிரிவை மத்திய அரசு ஏற்கனவே அறிவித்துள்ள கோவை **Defense Corridor**-ல் அமைக்க மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்.



## செமிகண்டக்டர் உற்பத்தி மையம்



மத்திய அரசின் சுயசார்பு இந்தியா கொள்கையின் ஒரு பகுதியாக கோவை Defence Corridor-ன் முக்கிய அங்கமாக பாதுகாப்பு தளவாடங்களுக்கு தேவைப்படும் செமிகண்டக்டர் பாகங்களை தயாரிக்க பாதுகாப்பு அமைச்சகத்திடம் வலியுறுத்தப்படும்.

## சென்னை- பெங்களூரு தொழில்துறை வழித்தடம் கோவைக்கு நீட்டிப்பு

சென்னை- பெங்களூரு தொழில்துறை வழித்தடத்தை (Chennai Bengaluru Industrial Corridor) கோவை வழியாக கொச்சி வரை நீட்டிப்பு செய்து மத்திய அரசு ஆகஸ்டு 2023-ல் ஒப்புதல் வழங்கியது. இந்த திட்டம் மூலம் கோவை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகள் மேலும் வளர்ச்சி அடைய வழிவகைச் செய்யப்பட்டுள்ளது. இந்த தொழில்துறை வழித்தட திட்டத்தை மத்திய அரசின் உதவியுடன் விரைந்து செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.




## Die Casting தொழில் ஊக்குவிப்பு



கோவையில் நலிவடைந்து வரும் Die Casting தொழிலை மேலும் ஊக்குவிக்க பாதுகாப்பு அமைச்சகத்தின் உதவியுடன் ஆயுத தளவாடங்கள், உதிரி பாகங்கள் உற்பத்தியை கோவையில் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இந்த Die Casting தொழிலை Home Hardware பொருட்களாக கருதப்படும் கதவு தாழ்ப்பாள்கள், modular kitchen உள்ளிட்டவற்றுக்கு பயன்படுத்தி அதற்கென ஒரு தனி சந்தையை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மூலப் பொருட்கள் எளிதாக கிடைக்கும் வகையில் பீளமேட்டில் SAIL கிடங்கு மீண்டும் திறக்கப்படும்.

## வாகன உதிரி பாக உற்பத்தி தொழிற்வழித் தடம்

கோவைக்கு Defense Corridor கொண்டுவந்ததை போல, Automotive Corridor அமைக்கப்பட்டு, ஆட்டோ உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் தொடங்க மத்திய அரசின் மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். பழைய காலாவதியான வாகனங்களை நொறுக்கி அவற்றில் இருந்து பயனுள்ள பொருட்களை எடுத்து மீண்டும் பயன்படுத்தக்கூடிய வகையில் scrapped automobile breaking yard அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.



## மின்னணு ஹார்டுவேர் உற்பத்தி



Automotive Corridor-ல் மின்னணு Automobile உபகரணங்கள் (Electronic Hardware) தயாரிக்க தனி கவனம் செலுத்தப்படும். அதே போல சென்னைக்கு அடுத்ததாக செல் போன் தயாரிப்பு நிறுவனங்களை கோவையில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். கோவையின் அறிவு மிகுந்த மாணவர்கள் மற்றும் தொழில்முனைவோரை கொண்டு கோவை நகரத்தை செயற்கை நுண்ணறிவு மைய நகரமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

- கோவைக்கு ஏற்கனவே Defence Corridor அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், Automotive Corridor, மென்பொருள் மையம், செமிகண்டக்டர் மையம் உள்ளிட்ட துறைகளுக்கு வலு சேர்க்க கோவையில் ஹார்டுவேர் சிறப்பு பொருளாதார மண்டலம் அமைக்க மத்திய அரசு மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.



## மென்பொருள் பயிற்சி நிறுவனங்கள்



மத்திய அரசின் உதவியுடன் கோவையில் Software Testing நிறுவனங்கள் நிறுவப்படும். ஜவுளி, மண் மற்றும் கட்டுமான பரிசோதனைகளுக்காக தனியார் தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் தனியார் கட்டுமான அமைப்புகளை நாடிப்போகும் நிலையை மாற்றி மத்திய அரசின் Advanced Testing Labs நிறுவப்படும்.

## Hydrogen Fuel Cell உற்பத்தி மையம்




கோவையை Hydrogen Fuel Cell உற்பத்தி மையமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். வீடுகளுக்கான 1KW முதல் 2KW மின் உற்பத்தி சாதன நிறுவனங்களுக்கு மத்திய அரசின் மானியம் பெற ஏற்பாடு செய்யப்படும். மின்சார வாகனங்களில் பயன்படுத்தப்படும் பிரத்யேக மோட்டார்களை மத்திய அரசின் மானியத்துடன் கோவையில் உற்பத்தி நிறுவனங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதே போல, மின்சார வாகனங்களில் பயன்படுத்தப்படும் லித்தியம் அயன் பேட்டரி தொகுப்பு (Battery Array) ஒருங்கிணைப்பு மையத்தை கோவையில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்க சிறப்பு மையம்



கோவை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள கிராமங்களில் விவசாயம், கைத்தறி, கைவினைத் தொழில் உள்ளிட்ட துறைகளில் மக்களின் அன்றாட பிரச்னைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் இளைஞர்கள் மற்றும் பொது மக்களால் உருவாக்கப்படும் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்க சிந்தனைகளுக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில் கோவையில் Innovation and Idea Centre உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் புத்தாக்க சிந்தனை உள்ளவர்கள் அவர்களது சிந்தனையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச்செல்ல மத்திய அரசின் திட்டங்கள், மானியங்கள் குறித்து வழிகாட்டுதல்கள் வழங்கப்படும்.

## குறுந்தொழில்களுக்கு தனி தொழிற்பேட்டைகள்

குறுந்தொழில்களுக்கு கோவையில் பல்வேறு பகுதிகளில் தனியாக தொழிற்பேட்டைகள் உருவாக்க CLUSTER திட்டத்தில் தேவைப்படும் தொழில்களுக்கு உதவிகள் செய்யப்படும்.



## ஒரே அமைப்பு மூலம் BIS, BEE தரச் சான்றிதழ்

பம்ப் மற்றும் பல்வேறு உபகரணங்களுக்கான தரசான்றிதழ்களான BEE (Bureau of Energy Efficiency) மற்றும் BIS (Bureau of Indian Standards) ஆகியவை ஒரே அமைப்பினால் வழங்கப்படும். இது சான்றிதழ்கள் பெறும் செயல்முறையை எளிமைப்படுத்தும். சூரிய சக்தி பம்ப்களுக்கான அரசு ஒப்பந்தங்களில் சிறுதொழில்களிடம் அரசு பெருமளவில் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யப்படும்.



# கைத்தறி, விசைத்தறி மற்றும் ஜவுளி

## பவர் டெக்ஸ் திட்டம் நீட்டிப்பு



விசைத்தறி தொழிலின் வளர்ச்சிக்காக கடந்த 2017 முதல் 2020 வரை மத்திய அரசு, சாதாரண விசைத்தறியை நாடா இல்லா விசைத்தறியாக மேம்படுத்துவது, நூல் வங்கி அமைப்பது, சூரிய சக்தி மின்சாரம் அமைப்பது உள்ளிட்ட 9 வகையான திட்டங்களை செயல்படுத்த பவர் டெக்ஸ் திட்டத்தை அமல்படுத்தியது. விசைத்தறி தொழிலின் நலனுக்காக இந்த திட்டம் மேலும் ஒரு ஆண்டு நீட்டிக்கப்பட்டு 2021 வரை செயல்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தை மீண்டும் கொண்டு வந்து விசைத்தறிகளுக்கு சலுகை பெற நடவடிக்கை எடுக்கப்படும்.



## கோவையில் பிரிண்டிங் ஆலைகள்

தமிழ்நாட்டில் விசைத்தறியில் நெசவு செய்யப்படும் துணிகளை தமிழ்நாட்டில் பிரிண்டிங் செய்வதற்கு கோவையில் பிரிண்டிங் ஆலைகள் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## விசைத்தறி மானியம்



பவர் டெக்ஸ் திட்டத்தின் கீழ் சாதாரண விசைத்தறிகளை, நாடா இல்லா விசைத்தறியாக மேம்படுத்த மத்திய அரசு பொது பிரிவில் 50% மானியமும், பட்டியல் பிரிவில் 75% மானியமும் பழங்குடியின பிரிவுக்கு 90% மானியமும் வழங்கப்பட்டது. இந்த திட்டத்தை நீட்டிப்பு செய்யும்போது பொது பிரிவு மானியத்தை 75% ஆக உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை பரிசீலிக்கப்படும்.



- பவர் டெக்ஸ் திட்டத்தின் கீழ் விசைத்தறி கூடங்களில் அமைக்கப்படும் சூரிய சக்தி மின்சார அமைப்புகளுக்கு பொது பிரிவில் 50% மானியமும், பட்டியல் பிரிவில் 75% மானியமும், பழங்குடியின பிரிவுக்கு 90% மானியமும் வழங்கப்பட்டது. இந்த திட்டத்தை நீட்டிப்பு செய்யும்போது பொது பிரிவில் வழங்கப்படும் மானியத்தை 80% உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

## கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டத்திருத்தம்

கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்து விசைத்தறிகளுக்கும் ரக ஒதுக்கீடு கொண்டுவர வேண்டும் என்ற விசைத்தறியாளர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.





## நெசவாளர்களுக்காக சிறப்பு ஓய்வூதியம்

கண் பார்வை மங்கிய, வயது மூப்பு அடைந்த மற்றும் இதர பிரச்னைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் நெசவாளர்களை மத்திய அரசின் ஓய்வூதிய திட்டங்களின் கீழ் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## நெசவாளர்களுக்கு இணைய வழி சந்தை வசதி

காதி தயாரிப்புகள் இணைய வழியில் சந்தைப்படுத்தப்படுவதை போல நெசவு தயாரிப்புகள் இணைய வழியில் உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளில் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.





## நெசவாளர்களுக்கு தனி வங்கி

நெசவு தொழில் செய்வோருக்கு மத்திய அரசின் உதவியுடன் தனி வங்கியை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். நெசவாளர்களுக்கென பிரத்யேக அடையாள அட்டை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## மூலப்பொருட்கள் வாங்க கடன் உதவி

நெசவு தொழிலில் ஈடுபடுவோரின் நலன் கருதி, மூலப்பொருட்கள் வாங்க பிணையில்லா கடன் உதவி வழங்கும் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.






## காப்பீட்டு தொகை

மத்திய அரசின் பங்கர் பீமா திட்டத்தின் கீழ் நெசவாளர்களுக்கு வர வேண்டிய காப்பீட்டு நிலுவை தொகை மற்றும் மருத்துவ காப்பீட்டுத் தொகை ஆகியவற்றை விரைந்து பெற்று தர நடவடிக்கை எடுக்கப்படும்.

## NTC ஆலைகளுக்கான தீர்வு

NTC எனப்படும் தேசிய ஜவுளி நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பல ஆலைகள் செயல்படாமல் உள்ள நிலையில், ஊழியர்களுக்கு முறையாக ஊதியம் வழங்காமலும் இருந்து வரும் நிலையில், அதன் பிரச்னைகளுக்கு தீர்வு காணப்படும்.



## Turkey Towel உற்பத்தி ஊக்குவிப்பு



ஒரு காலத்தில் Turkey Towel உற்பத்தியில் முன்னோடியாக திகழ்ந்த பல்லடத்தை மீண்டும் அதன் பெருமையை மீட்டெடுக்க Turkey Towel உள்ளிட்ட மதிப்புக்கூட்டப்பட்ட ஜவுளிகள் உற்பத்தியை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## ஆயத்த ஆடை உற்பத்தி மையம்

பல்லடத்தை ஆயத்த ஆடை உற்பத்தி மையாக அறிவிக்க மத்திய அரசை வலியுறுத்துவோம்.





# கோவைக்கான சுகாதாரம் சார்ந்த திட்டங்கள்

## கோவைக்கு மத்திய அரசின் புற்றுநோய் மருத்துவமனை

கொங்கு மண்டலத்தில் மத்திய அரசின் உதவியோடு உயர்தர புற்றுநோய் சிகிச்சை மருத்துவமனை நிறுவப்படும். ஆயுஷ்மான் பாரத் திட்ட பயனாளிகளுக்கு இம்மருத்துவமனையில் இலவச சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.




## பிரதமரின் மக்கள் மருந்தகங்கள்

எளிய மக்கள் அதிகம் பயனடையும் வகையில் கோவையில் பிரதம மந்திரியின் மக்கள் மருந்தகங்களின் எண்ணிக்கை 250 ஆக உயர்த்தப்படும்.

## போதையில்லா கோவை

மது மற்றும் போதை பொருட்களால் சீரழிந்து கொண்டிருக்கும் சமுதாயத்தை மீட்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு, போதை பொருள் புழக்கத்தை முற்றிலுமாக கட்டுப்படுத்த தேசிய போதைப்பொருள் தடுப்பு NCB அலுவலகத்தின் கிளை கோவையில் நிறுவப்படும்.







## தேசிய முதியோர் நல மருத்துவ மையம்

முதியோர்களுக்கான உடல் ரீதியான மற்றும் உளவியல் ரீதியான சிறப்பு மருத்துவ தேவையை பூர்த்தி செய்ய கோவையில் தேசிய முதியோர் நல மருத்துவ மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

# கோவையின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு



## நொய்யல் நதி மறுசீரமைப்பு

கோவையின் ஜீவநதியான நொய்யல் ஆற்றில் அதிகரித்து வந்த மாசுப்பாட்டை திராவிட ஆட்சியாளர்கள் கண்டுகொள்ளாமல் விட்டதால் நொய்யல் ஆற்று நீரின் நச்சுத்தன்மை அபாயகரமான நிலையை தாண்டியுள்ளது.

சமீபத்தில் நொய்யல் ஆற்றில் தமிழக மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் நடத்திய ஆய்வில் ஆற்றின் பல இடங்களில் ஒரு லிட்டரில் 2,160 மி.கி அளவிற்கு TDS (TOTAL DISSOLVED SOLIDS) இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. TDS அளவு 500 மி.கி.க்கு கீழ் இருந்தால்தான் பயன்பாட்டிற்கு தகுதியானது என கருதப்படும்.

தமிழக பாஜகவின் தொடர் முயற்சியால் மத்திய அரசு
990 கோடி ரூபாய் நொய்யல் சீரமைப்புக்கென்று ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த நிதி சரியாக பயன்படுத்துவது உறுதி செய்யப்பட்டு மாசுபட்டு இருக்கும் நொய்யல் நதியை தூய்மைப்படுத்தி மாசற்ற நதியாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



## கோவையின் பசுமைபரப்பு அதிகரிக்க நடவடிக்கை

கடந்த 50 ஆண்டுகால திராவிட ஆட்சியில் ஆட்சியாளர்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்காத காரணத்தால் ‘சில்லென்று இருந்த கோயம்புத்தூரின் சராசரி வெப்பநிலை 1.5°C வரை அதிகரித்து, இன்று வெயில் சுட்டெரிக்கிறது. இந்த நிலையை மாற்றி கோவை என்றுமே பசுமையாக இருக்க அதிகளவில் மரங்கள் நட்டு கோவையின் பசுமை பரப்பை அதிகமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்வோம்.

## மியாவாக்கி காடுகள்



ஜப்பானில் வெற்றிகரமாக செயல்பட்டுவரும் மியாவாக்கி முறையில் உருவாக்கப்படும் காடுகள் பல்லடம், சூலூர் மற்றும் கவுண்டம்பாளையத்தில் உருவாக்கி பசுமை அடர்த்தியை அதிகரிப்போம்.



## கூட்டுறவு முறையில் பசுமை எரிசக்தி

குடியிருப்பு பகுதிகளில் கூட்டுறவு முறையில் மக்களின் பங்களிப்போடு சிறிய அளவிலான காற்றாலை அல்லது சூரிய மின் சக்தி தொகுப்புகள் அமைத்து அவற்றை தன்னிறைவு பெற்ற பகுதிகளாக மாற்ற தேவையான கொள்கையை உருவாக்குவோம்.

அதே போன்று Foundry தொழிலில் உள்ளவர்களுக்கும் கூட்டுறவு முறையில் பசுமை எரிசக்தி அமைப்புகளை மத்திய அரசின் மானியத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## கனிம வளங்கள் கொள்ளையடிக்கப்படுவது தடுக்கப்படும்



எழில்மிகு கோவையின் வளங்கள் அனைத்தும் சுரண்டப்பட்டு அண்டை மாநிலங்களுக்கு கடத்தப்படுகிறது. இது இரும்பு கரம் கொண்டு அடக்கப்படும்.

## நிலக்கரி சாம்பல் மூலம் செங்கல்

சங்கனூர் மற்றும் தடாகம் பகுதியில் அனல்மின் நிலையங்களிலிருந்து நிலக்கரி சாம்பல் (fly ash) கொண்டு வரப்பட்டு நிலக்கரி சாம்பல் மூலம் செங்கல் தயாரிக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், ஐஐடி போன்ற உயர்ந்த நிறுவனங்களின் உதவியுடன் கட்டுமான கற்களை அடையாளம் கண்டு அவற்றை தயாரிக்க ஊக்கம் கொடுக்கப்படும்.



## பறவைகள் சரணாலயம்




தடாகம் பகுதியில் அதிகளவு பறவைகள் வந்து செல்வதால் அந்த பகுதியின் சுற்றுலாவை மேம்படுத்த பறவைகள் சரணாலயம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



## சிறப்பு திடக்கழிவு மேலாண்மை

கோவையில் அனுதினமும் சேகரிக்கப்படும் குப்பைகளை தரம் பிரித்து சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படாத வகையில் அகற்ற மத்திய அரசின் ஸ்மார்ட் சிட்டி திட்டம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

# கோவையின் குடிநீர் ஆதாரம்



## கோவை குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு

திமுகவின் கையாலாகாத தனத்தால் கோவையின் முக்கிய நீர் ஆதாரமாக இருக்கும் சிறுவாணி அணையிலிருந்து மக்களுக்கு குடிநீர் கிடைப்பது சிரமமாகி இருக்கிறது. சிறுவாணி அணையின் மொத்த நீர் தேக்க உயரம், 50 அடி. தமிழக- கேரள ஒப்பந்தப்படி, கோவை மக்களின் குடிநீர் தேவைக்காக தினமும், 10 கோடி லிட்டர் தண்ணீரை கேரள அரசு தர வேண்டும்.

ஆனால், அணையின் பராமரிப்பு கேரள அரசிடம் உள்ள நிலையில், மழை இல்லாத காலத்தில் சராசரியாக 3.5 கோடி லிட்டர் மட்டுமே கோவைக்கு வழங்கப்படுகிறது. பல ஆண்டுகளாக அணை தூர்வாரப்படாமல் இருப்பதால் அணையின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. கேரள முதல்வருடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் தமிழக முதல்வர் கூட்டணிக்காக மக்களின் உரிமையில் விளையாடி வருகிறார்.

2024 ஜீன் 4-ல் அமையும் மத்திய பாஜக அரசின் முதல் பாராளுமன்ற கூட்டத்தில் கோவை எம்.பியின் முதல் குரலாக கோவை நகரின் குடிநீர் பிரச்னை குறித்துதான் இருக்கும் என உறுதி அளிக்கிறோம்.

## கோவைக்கு நிபுணத்துவம் வாய்ந்த நீர் மேலாண்மை



விவசாயத்திற்கு அடிப்படையான நிலத்தடி நீர் மேலாண்மை, சொட்டு நீர் பாசனம் உள்ளிட்டவை அமைக்க மத்திய அரசின் நிதியினை பெற்றுத் தருவோம்.

## நிலத்தடி நீர் செறிவூட்டல்



மழை காலங்களில் நொய்யல் ஆற்றில் கலக்கும் உபரி நீரை வைத்து பள்ளபாளையம் முதல் பொங்கலூர் வரை உள்ள பகுதிகளுக்கு நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டத்தை செயல்படுத்துவோம்.

## கௌசிகா நதி சீரமைப்பு



நரசிம்மநாயக்கன்பாளையம் அருகே குருடி மலையில் தொடங்கி இடிகரை, கோவில்பாளையம், வாகராயம்பாளையம், தெக்கலூர் உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட கிராமம் மற்றும் நகர பஞ்சாயத்துகள் வழியே 52 கி.மீ தொலைவுக்கு பாய்ந்த கௌசிகா நதி தற்போது முழுமையாக வற்றி கழிவுகள் கொட்டப்படும் இடமாக மாற்றப்பட்டுள்ளது. மத்திய அரசின் உதவியுடன் இந்த நதியை மீட்டெடுத்து அதன் பழைய பொலிவை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



### ஜல்ஜீவன் திட்டம்

சூலூர் மற்றும் பல்லடத்தில் ஜல்ஜீவன் திட்டத்தை விரைந்து முடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்

## கோவைக்கான விளையாட்டு மேம்பாடு

### கோவையில் சர்வதேச விளையாட்டு மைதானம்

கோவையில் உள்ள விளையாட்டு வீரர்-வீராங்கனைகள் உலக தரத்தில் பயிற்சிகளை மேற்கொள்ளவும், பல்வேறு விளையாட்டு போட்டிகளை நடத்தவும் மத்திய அரசின் 'Khelo India' திட்டம் மூலம் சர்வதேச விளையாட்டு மைதானம் அமைக்கப்படும்.



### விளையாட்டு வீரர்களுக்கு

இந்த பகுதியின் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு சிறப்பான பயிற்சிகள் கிடைப்பதை உறுதி செய்ய ஆசியாவின் மிகப்பெரிய விளையாட்டு பயிற்சி மையங்களில் ஒன்றான தேசிய விளையாட்டு ஆணையம், பாட்டியாலாவின் (SAI Patiala) கிளை பயிற்சி மையம் கோவையில் அமைக்கப்படும்.

### சிறப்பு விளையாட்டு பயிற்சி மையம்

பல்லடத்தில் உயர்தர விளையாட்டு பயிற்சி மையம் அமைக்கப்படும். அதில் விளையாட்டு நடுவர்களுக்கான பயிற்சிகள் மற்றும் தேர்வுகள் நடத்தப்படும்.



# ஆன்மீகம்



## ஆன்மீக யாத்திரை

முதியோர்களுக்கு இலவசமாக அல்லது மானியத்தில் அயோத்தி, காசி, கேதர்நாத், வைஷ்ணவி தேவி, பூரி ஜகன்நாத், சீரடி சாய்பாபா உள்ளிட்ட பிற மாநில கோவில்களுக்கும் ஆன்மீக பயணங்கள் செல்ல உதவிகள் வழங்குவோம்.

நாடு முழுவதும் உள்ள புராதனமான ஆன்மீக தலங்களுக்கு கோவையில் இருந்து 10 புதிய ரயில்கள் இயக்கப்படும்.

## ‘PRASAD’ திட்டத்தில் கோவில் புனரமைப்பு



மத்திய அரசின் ‘PRASAD’ திட்டத்தின் கீழ் கோவையின் சிதிலமடைந்த அல்லது முறையாக பேணப்படாத பழமையானக் கோயில்கள் அனைத்தும் புனரமைக்கப்படும்.



## சபரிமலை யாத்திரை

சபரிமலை யாத்திரையை ஒருங்கிணைக்க உதவி மையம் அமைக்கப்பட்டு பக்தர்களின் வசதிகள் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.


# நிர்வாகம் மற்றும் சேவை

## உயர்நீதிமன்ற கிளை



சென்னை உயர்நீதிமன்ற கிளை மதுரையில் அமைந்தது போல கோவையிலும் அமைக்கப்பட வேண்டும் என்ற கோவை மக்களின் கோரிக்கை மத்திய சட்ட அமைச்சகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும்.

## குறைகளை தெரிவிக்க செயலி




பொதுமக்களின் குறைகளை கேட்டு அறியவும் கோரிக்கைகளை நிவர்த்தி செய்யவும் மக்களவை உறுப்பினரை தொடர்பு கொள்ளவும் பிரத்யேக செயலி உருவாக்கப்படும்.



## இல்லத்தரசிகளுக்கு பிரத்யேக முத்ரா கடன் உதவி முகாம்

சுயதொழில் தொடங்க விரும்பும் இல்லத்தரசிகளுக்கு மத்திய அரசின் ₹ 10 லட்சம் வரை பிணையில்லா கடன் வழங்கும் முத்ரா கடனை எளிமையாக பெற சிறப்பு முகாம்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அதிக நிதி



பெண்கள் முன்னேற்றத்திற்காக மகளிரை தொழில்முனைவோராக்கும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அதிகப்படியான நிதியை ஒதுக்கீடு செய்வோம்.

## இ-சேவை மையங்கள்

கோவை பாராளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளிலும் கோவை பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகம் திறக்கப்படுவதோடு, 50 இடங்களில் இ-சேவை மையங்கள் தொடங்கப்பட்டு மத்திய அரசின் திட்டங்கள் எளிதாகவும் இலவசமாகவும் பயனாளிகளுக்கு கிடைக்கும் வகையில் சேவைகள் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

## Food Bank

கர்மவீரர் காமராஜர் பெயரில் 3 food bank (உணவகம்) அமைக்கப்படும்.

## சிறப்பு தணிக்கை

கடந்த 10 ஆண்டுகளில் கோவைக்கு மத்திய அரசு வழங்கிய திட்டங்கள் சிறப்பு தணிக்கைக்கு உட்படுத்தப்படும்.

## தேசிய புலனாய்வு முகமை

கோவையில் NIA கிளை அலுவலகம் அமைக்கப்படும்




## அடுக்குமாடி குடியிருப்பு

வீடு கட்ட நிலம் இல்லாமல் இருப்பவர்களுக்கு பிரதமரின் வீடு வழங்கும் திட்டத்தில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

## வள்ளி கும்மி

வள்ளி கும்மிக்கு பாரம்பரிய கலையாக உரிய அங்கீகாரம் கிடைப்பது உறுதிசெய்யப்படும்.





## இந்திய கலாச்சார ஆராய்ச்சி மையம்

இந்திய பாரம்பரியம், கலாச்சாரம் பற்றியும், அதில் உள்ள அறிவியல் கருத்துகள் பற்றி ஆராயவும், யோகா பயிற்சி , சித்த ஆயுர்வேத பயிற்சி மையம் ஆகியவை உள்ளடங்கிய ஒரு ஆராய்ச்சி மையம் இயற்கை எழில் கொஞ்சும் கோவையில் மத்திய அரசின் உதவியுடன் அமைக்கப்படும்.

## கோவை தின கொண்டாட்டங்கள்

ஆண்டுதோறும் நவம்பர் 24 கோவை தினமாக கோவை மக்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. கோவை தின கொண்டாட்டத்தை அரசு விழாவாக நடத்தி, அதில் வள்ளி கும்மி போன்ற பாரம்பரிய நடனங்களை மக்களுக்கு காட்சிப்படுத்த ஏற்பாடு செய்யப்படும்.



## உள்ளாட்சி அமைப்புகள்



உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசு வழங்கும் நிதி செலவினங்களுக்கான பொறுப்பை அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலர்களே ஏற்க ( accountability ) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## மத்திய சுற்றுலா அலுவலகம்

Incredible India

கோவை தொகுதியின் சுற்றுலா வசதிகளை மேம்படுத்த மத்திய அரசின் சுற்றுலாத்துறை அலுவலகத்தை கோவையில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## மோட்டார் வாகன சட்டத்தில் திருத்தம்




மோட்டார் வாகன சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து வாகனங்களுக்கான தரச் சான்றிதழை (Fitness Certificate) ஆன்லைனில் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் போக்குவரத்து துறையில் லஞ்ச லாவணயம் களையப்படும்.

## ரயில்வே பயனர்கள் ஆலோசனை கூட்டம்




ரயில்வே பயனர்கள் ஆலோசனைக் கூட்டம் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நடத்தப்பட்டு பயணிகளின் ஆலோசனைகள் மற்றும் குறைகள் பரிசீலிக்கப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## போதை மறுவாழ்வு மையம்




கோவை பாராளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட கிராமப்புறங்களின் அருகாமையில் மத்திய அரசின் உதவியுடன் போதை மறுவாழ்வு மையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



## கோவையில் சர்வதேச தரத்தில் அருங்காட்சியகம்

கோவை நகரத்தின் பாரம்பரியம், கலாச்சாரத்தை பறைசாற்றும் வகையிலும், ஜவுளி, நகை, பம்ப் தொழில், பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு தொழில்களில் கோவை எவ்வாறு வளர்ச்சி பெற்றது என்பதை விளக்கும் வகையிலும் 3D கதைகளை உள்ளடக்கிய கோயம்புத்தூர் பாரம்பரிய அருங்காட்சியகம் நிறுவப்படும்.

## உங்களைத் தேடி உங்கள் உணவு

மத்திய அரசின் கரீப் கல்யாண் அன்ன யோஜனா திட்டத்தின் மூலம் மலிவு விலையில் பாரத் அரிசி மற்றும் பாரத் பருப்பு அனைத்து மக்களுக்கும் கிடைக்கும் வகையில் வாகனங்கள் மூலம் உங்கள் பகுதிக்கே வந்து விநியோகிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.



## திட்டங்களை அமல்படுத்த வல்லுநர் குழு




மேற்கூறிய அனைத்து திட்டங்களையும் அமல்படுத்த ஒரு வல்லுநர் குழு அமைக்கப்படும். அந்த வல்லுநர் குழு மாதம் ஒருமுறை கலந்து ஆலோசித்து எவ்வாறு திட்டங்களை வேகமாக அமல்படுத்தலாம் என்பதை ஆராயும்.

## ஒருங்கிணைந்த பயனாளிகள் அட்டை

மத்திய அரசின் பயனாளிகளுக்கு 'ஒருங்கிணைந்த பயனாளிகள் அட்டை' -மோடியின் குடும்ப அட்டை வழங்கப்படும். இந்த அட்டை அவர்களை தொடர்பு கொள்ளவும், அவர்கள் தகுதி பெறும் எந்தவொரு கூடுதல் திட்டங்களுக்கும் தங்களை இணைத்து கொள்ளவும் உதவும்.




## தூய்மையான கோவை


மத்திய அரசு சமீபத்தில் வழங்கிய தூய்மையான நகரங்கள் கணக்கெடுப்பு 2023 விருதுகளில், 2022 இல் 42 வது இடத்தில் இருந்த கோவை தற்போது 182 வது இடத்திற்கு சரிந்துள்ளது. மறுபடியும் கோவையை தூய்மை நகரமாக மாற்ற ஆவன செய்யப்படும்.

## இளைஞர் விடுதிகள்

சுற்றுலா செல்லும் இளைஞர்களுக்காக இளைஞர் விடுதிகள் (Youth hostel) ஏற்படுத்தப்படும்.



# கோவை வடக்கு மற்றும் கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி




- கணபதி பகுதியில் நிலவும் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காண மத்திய அரசின் உதவியுடன் சத்தி சாலையை விரிவாக்கம் செய்வதுடன் டெக்ஸ்டூல் முதல் கரட்டுமேடு வரை மேம்பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- கோவை அரசு கல்லூரி மருத்துவமனை எதிரே நகர பேருந்துகள் நின்று செல்ல யூ டர்ன் அமைந்துள்ளதால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அந்த இடத்தில் பாதசாரிகள் எளிதாக கடக்க வசதியாக மத்திய அரசின் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் நடை மேம்பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- கோவை நகரின் நெரிசல் மிகுந்த பகுதிகளில் நவீன வாகன நிறுத்துமிடங்கள் அமைக்கப்படும். கோவையின் முக்கிய இடங்களில் கண்காணிப்பு கேமிராக்கள், இலவச Wi-Fi, ஸ்மார்ட் எல்.இ.டி விளக்குகள் உள்ளிட்டவை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- சங்கனூர் ரயில்வே கேட்டில் அடிமட்ட பாலம் அமைப்பதற்கான நடவடிக்கை மத்திய அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படும்.
- வீரகேரளம் பகுதியில் புதிய கட்டிடம் கட்ட அனுமதி பெற  ஹவுசிங் போர்ட்டின் தடை இல்லா சான்று பெற வேண்டும் என்ற கோவை மாநகராட்சியின் விதிமுறையால் மக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகி உள்ளனர். இந்த  பிரச்னைக்கு உரிய தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும்.
- பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு 1982-ல் 950 ஏக்கர் நிலம் கொடுத்து இதுவரையிலும் உரிய இழப்பீடு பெறாமல் உள்ள 400-க்கும் மேற்பட்ட விவசாயிகளின் குடும்பங்களுக்கு உரிய நிவாரணம் பெற்று தர ஏற்பாடு செய்யப்படும்.

# கோவை பாராளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குறுதிகள்

- 1998 கோவை குண்டுவெடிப்பு சம்பவத்தில் பலியானவர்களின் நினைவாக ஆர் எஸ் புரம் பகுதியில் ஒரு நினைவு சின்னம் அமைக்கப்படும்.
- நொய்யல் நதியின் ஒரு பகுதியாக விளங்கும் சித்திரை சாவடி வாய்க்காலில் கழிவுகள் கலப்பதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- IOB காலனி பகுதியின் பெரும் பிரச்னையாக இருக்கும் குப்பை கழிவு பிரச்னைக்கு தீர்வு காண திடக்கழிவு சுத்திகரிப்பு நிலையத்திற்கு முக்கியத்துவம் அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



## கவுண்டம்பாளையம் மற்றும் சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதி

- கோவையின் ஐ.டி மையமாக திகழும் சரவணம்பட்டியில் கடுமையான வாகன நெரிசல் ஏற்படுவதால் மக்கள் பெரிதும் சிரமத்திற்கு ஆளாகி உள்ளனர். மக்களின் அவதியை போக்க சரவணம்பட்டி பகுதியில் மத்திய அரசின் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் புதிய மேம்பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
- கோவை ஹோப் காலேஜ் சிக்னலில் இருந்து விளாங்குறிச்சி சாலை செல்லும் வழியில் டைடல் பார்க் அருகே அமைந்துள்ள ரயில்வே மேம்பால பணிகள் மத்திய அரசால் முடிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும், மாநில அரசு நிலத்தை கையகப்படுத்தி இணைப்பு சாலை அமைக்காததால் மக்களின் பயன்பாட்டிற்கு வராமல் இருக்கிறது. இந்த திட்டத்தில் உள்ள பிரச்னைகளை களைந்து பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

- சரவணம்பட்டிக்கு நாள் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கான ஐடி ஊழியர்கள் வந்து செல்லும் நிலையில், அங்கு முறையான பேருந்து நிறுத்தம் இல்லாத நிலை உள்ளது. மத்திய அரசின் அம்ருத் திட்டத்தின் கீழ் ஒரு பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- சங்கனூர் கண்ணப்ப நகர் பகுதியில் ரயில்வே சுரங்கப்பாதை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- ஒண்டிப்புதூர் சிவலிங்கபுரம் பகுதி ராமச்சந்திர நாயுடு சாலையை பிரதானமாக பயன்படுத்தும் மக்களின் பல ஆண்டு கோரிக்கையான ரயில்வே மேம்பாலம் திட்டத்தை விரைந்து செயல்படுத்த மத்திய அரசு மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.
- கோவை கணபதி முதல் பீளமேடு வரை உள்ள 100 அடி சாலை மத்திய அரசின் இந்திய உணவு கழகத்திற்கு சொந்தமானது. 7 அல்லது 8 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த சாலையை சீரமைக்கும்போது பொதுமக்களின் பயன்பாட்டிற்கு FCI நிறுவனம் தடை விதிப்பதால் மிகுந்த சிரமம் ஏற்படுவதாக TNHB காலனி, இந்திரா நகர், A.K.நகர், வரதராஜுலு நகர், FCI ரெசிடென்ஷியல் காலனி, V.G. ராவ் நகர் உள்ளிட்ட பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். மத்திய அரசு மூலம் இந்த பிரச்னைக்கு விரைந்து தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும்.
- சரவணம்பட்டியில் மக்களின் பொழுதுபோக்கிற்காக மத்திய அரசின் உதவியுடன் பொதுப் பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

- மத்திய அரசின் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் கோவை பெரியகுளம் ஏரி சீரமைக்கப்பட்டுள்ளதை போன்று, சிங்காநல்லூர் ஏரியும் சீரமைக்கப்பட்டு அதன் எழில் மாறாமல் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

- மலைவாழ் பகுதியில் பழங்குடியின மக்கள் பயன்பெறும் வகையில் ஆனைகட்டி பகுதியில் மத்திய அரசின் ஏகலவ்யா பள்ளி கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.

- சரவணம்பட்டி, வெள்ளக்கிணறு மற்றும் கவுண்டம்பாளையத்தை எல்லையாகக் கொண்டு அமைந்துள்ள 200 ஏக்கர் பரப்பளவிலான சின்னவேடம்பட்டி ஏரி பல ஆண்டுகளாக தூர்வாரப்படாமல் கவனிப்பின்றி கிடக்கின்றது. மத்திய அரசின் ஜல் சக்தி துறையின் உதவியுடன் இந்த ஏரி புனரமைக்கப்பட்டு, கோவையின் முக்கிய நீர் தேக்கமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

- தடாகம் மற்றும் கணுவாயில் தலா ஒரு உள்விளையாட்டு மைதானத்தை உருவாக்கி கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



Singanallur

# சூலூர் மற்றும் பல்லடம் சட்டமன்ற தொகுதி

- விமானத்துறை இயக்குனரகம் மற்றும் தனியார் பங்களிப்போடு விமான பயிற்சி கல்லூரி சூலூரில் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- கோவையின் தொழில் வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் வகையில் மாதப்பூர் அல்லது இருகூரில் பல்முனை சரக்கு முனையம் அமைக்கப்படும்.
- நெசவு மற்றும் பிற தொழிற்சாலைகள் அதிகம் நிறைந்த சோமனூர் சுற்றுவட்டார பகுதி மக்கள் பயன்பெற சோமனூர் ரயில் நிலையத்தை மத்திய அரசின் அம்ருத் பாரத் திட்டத்தில் சேர்த்து அதிகப்படியான ரயில்கள் நின்று செல்லும்படி வழிவகை செய்வோம்.
- சோமனூர் மற்றும் பல்லடத்தில் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி தொழில்களின் வளர்ச்சிக்காக சூலூரில் சாயம் மற்றும் பிரிண்டிங் வசதியுடன் கூடிய ஒருங்கிணைந்த ஜவுளி சந்தை வளாகம் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
- கோவையில் மத்திய அரசு ஏற்கனவே பாதுகாப்பு தொழில் வழித்தடம் அறிவித்துள்ள நிலையில் சூலூர் கமநாயக்கன்பாளையத்தில் சிறு தொழில் மேம்பாட்டு மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் சூலூர் குளத்தை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்

Palladam



- பல்லடம் சட்டமன்ற தொகுதியில்  100 நாட்களுக்குள் 5 மக்கள் மருந்தகங்கள் கொண்டு வரப்படும்.
- பல்லடம் , காட்டூரில் கான்கிரீட் வீடு இல்லாதவர்களுக்கு பிரதமரின் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் வீடு கட்டி தர நடவடிக்கை எடுக்கப்படும்.
- ஒவ்வொரு தாய் கிராமத்திலும் மத்திய அரசின் கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் குறைந்தது ஒரு விளையாட்டு மைதானம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- மத்திய அரசின் உதவியுடன் பல்லடம் வளையப்பாளையத்தில் சிறப்பு மருத்துவமனை கட்டி தரப்படும்
- பொங்கலூர்,கொடுவாய், பல்லடம் பகுதியில் தயாரிக்கப்படும் விளை பொருட்களுக்கு மத்திய அரசின் உதவியுடன் குளிர் பதன கிடங்கு அமைத்து தர நடவடிக்கை எடுக்கப்படும்.
- பல்லடத்தின் கொடுவாய் பகுதியை சுற்றுவட்டார பகுதிகளுடன் இணைக்கும் வகையில் சீரான பேருந்து வசதி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

- பல்லடம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் 100 நாள் வேலை திட்டத்தில் நடக்கும் முறைகேடுகளை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
- நொய்யல் நதியின் முக்கிய நீர் ஆதாரமாக விளங்கும் நீலம்பூர் பஞ்சாயத்துக்கு உட்பட்ட 396 ஏக்கர் பரப்பளவு உள்ள ஆச்சான்குளத்தை தூர்வாரி கரைகளை பலப்படுத்த மத்திய அரசு உதவியுடன் நடவடிக்கை எடுக்கப்படும். கோவையின் முக்கிய ஈரநில பகுதியாக விளங்கிய இந்த குளம் ஆகாய தாமரையின் ஆக்கிரமிப்பால் அரிய நீர் பறவைகளான cormorants, pelicans, darters உள்ளிட்டவற்றின் வருகையின்றி பொலிவிழந்து காட்சி அளிக்கிறது. இந்த குளத்தை மீட்டெடுத்து சுற்றுச்சூழலை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- ஆளும் திமுக அரசால் சூலூர் செந்தேவி பாளையத்திலிருந்து விரட்டப்பட்ட 84 குடும்பங்கள் வீடு இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு பிரதம மந்திரியின் வீடு கட்டும் திட்டம் மூலம் வீடுகள் கட்டித் தர நடவடிக்கை எடுக்கப்படும்.

## மக்களின் நல்லாசியுடன் 2026-ல் தமிழகத்தில் பாஜக ஆட்சி அமையும் போது

- பிரதமரின் விவசாய கௌரவ நிதி ₹ 6,000-ல் இருந்து ₹ 15,000 ஆக உயர்த்தப்படும்.
- டாஸ்மாக் கடைகள் படிப்படியாக மூடப்பட்டு கள்ளுக் கடைகள் திறக்கப்படும். முதற்கட்டமாக கிராமங்களில் உள்ள மதுக்கடைகள் முற்றிலுமாக மூடப்பட்டு படிப்படியாக நகர்ப்புறங்களில் உள்ள கடைகளும் மூடப்படும்.
- தமிழக காவல்துறையினரின் ஊதியம் இரட்டிப்பாக்கப்படும். வாரத்திற்கு ஒரு நாள் கட்டாய விடுமுறை அளிக்கப்படும்.
- இந்து அறநிலையத்துறையின் கோவில்கள் மீதான அதிகாரம் மக்களிடம் வழங்கப்படும்.

வாக்களிப்பீர் தாமரைக்கு